முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 110 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்குவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்து, அதற்குரிய ஆணையும் இடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி இப்போது முடிந்தவரையில் அதை புதிய மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்குப் பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே மாண்புமிகு புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள், சேத்தியாத்தோப்பு துணை சுகாதார நிலையத்திற்கு upgradation வேண்டும் என்றார்கள். நாங்கள் அதன் தரத்தை உயர்த்துவதற்கு ஆணையிட்டோம். ஆனால், அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு இடமில்லை. அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் பெற்றுக் கொடுத்தார்கள் என்றால், அதைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பொதுப் பணித் துறை மூலமாகக் கட்டுவதற்கு இடம் கேட்டால் இடம் இல்லை என்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் பெற்றுக் கொடுத்தார்கள் என்றால் கட்டிக் கொடுக்கலாம். அது அ.தி.மு.க. தொகுதி என்றெல்லாம் பார்க்கவில்லை, சேத்தியாத்தோப்பு துணை சுகாதார நிலையத்தினை upgradation பண்ண வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, அதற்கு கட்டடம் கட்ட நிலம் இல்லாததால்தான் வேறு இடத்திற்கு மாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

24—

கம்பியில்லாத் தந்திக் கருவிகள்

***31306—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2009 பிப்ரவரி 19]

(அ) வருவாய்த் துறை அலுவலகங்களில் கம்பியில்லாத் தந்திக் கருவிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள 31 மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் கம்பியில்லா தந்திக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 18 மாவட்டங்களுக்கு மேற்படி வசதியை அரசின் நிதி நிலைக்கேற்ப படிப்படியாகச் செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை என்பது மிக முக்கியமான ஒரு துறை. மழைக் காலங்களாக இருந்தாலும், புயல்-வெள்ளச் சேதக் காலங்களாக இருந்தாலும் அடித்தளத்தில் இருக்கிற அனைத்து மக்களையும் சென்றடைந்து அவர்களுக்கான நிவாரணம் வழங்குகின்ற பணியைச் செய்கின்ற அந்த மகத்தான துறையில் இப்போது கிராம நிருவாக அலுவலர்களுக்கு நாம் நிருவாக அலுவலகத்திற்கான கட்டடங்களைக் கட்டித் தந்திருக்கிறோம். அதேபோன்று வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள், RDO, DRO அனைவருக்கும் அலுவலகம் இருக்கிறது, வாகனங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அதற்குக் கம்பியில்லாத் தந்தி வசதியை நாம் ஏற்பாடு செய்தோம் என்று சொன்னால், காவல் துறையில் இருப்பதுபோல wireless ஏற்பாடு செய்து கொடுத்தால், திடீரென்று ஒரேயொரு தொகுப்பின்மூலம் அந்த மாவட்டத்திற்கு முழுவதும் அந்தத் தகவலைப் பரிமாறி உடனடியாக இயற்கை இடர்பாடுகளைக் களைவதற்கு அரசுத் துறையை நாம் முடுக்கி விடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆதலால் தமிழக அரசு உடனடியாக மீதமுள்ள மாவட்டங்களுக்கும் இந்தக் கம்பியில்லாத் தந்தி வசதியைச் செய்து தருவதற்கு, இந்த wireless வசதியைச் செய்து தருவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

[2009 பிப்ரவரி 19

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அரசில், புயல் வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற 13 கடலோர மாவட்டங்களுக்குக் கம்பியில்லாத் தந்திக் கருவிகள் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு, அவை படிப்படியாக உயர்த்தப்படுவதற்காக இப்போது இருவழித் தகவல் தொடர்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்று இருவழித் தொடர்பு உருவாக்குவதற்காக 99 இலட்சத்து, 25 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. தொடர், தொடராச் செலவினங்கள் அத்தனைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மத்திய அரசின் அனுமதி பெற்று அது பூர்த்தியாகும் நிலையில் இருக்கின்றது. இதற்கு அடுத்த கட்டமாக, வருகின்ற நிதி ஆண்டிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இதர மாவட்டங்களிலே கம்பியில்லாத் தந்தி முறைகளை வருவாய்த் துறையில் மேம்படுத்துவதற்காக அரசு கண்டிப்பாக பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது, அனைத்து கிராமங்களுக்கும் இன்றைக்கு கிராம நிருவாக அலுவலர் என்கின்ற V.A.O. (Village Administrative Officer) இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று அலுவலகம் இருக்கிறது. அவர்களைத் தொடர்புகொள்வதற்கு வசதியாக அந்த அலுவலகத்திற்கும் சேர்த்து இந்தக் கம்பியில்லாத் தந்தி வசதி என்று சொல்லக்கூடிய wireless கருவிகளைப் பொருத்துவதற்கு அரசு முன்வருமா? தொலைபேசிமூலம் தொடர்புகொள்ளலாம். கைபேசி வட்டாட்சியர் வரையில்தான் தரப்பட்டிருக்கிறது. R.I.-க்குக் கிடையாது, V.A.O.-க்குக் கிடையாது. இந்தக் கம்பில்லாத் தந்தி வசதியை இப்போது காவல் துறையில் மிகச் சிறப்பாக செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். வண்டிகளிலே பயணம் செய்கின்றபோதுகூட ஒரு அதிகாரி எந்த இடத்திலிருக்கிறார் என்று மாவட்டத்தினுடைய தலைமையிடத்திலிருந்து அந்த control room மூலம் தகவல் சொல்லப்பட்டால் ஆயிரம் தொலைபேசிகள்மூலமாக அந்தத் தகவலைப் பரிமாற்றுவதற்குப் பதிலாக ஒரேயொரு நிமிடத்தில் அந்த wireless கருவிகள்மூலமாக entire மாவட்டத்திற்கும் அந்தத் தகவலைப் பரிமாறி உடனடியாக நிவாரணப் பணிகளோ அல்லது இயற்கை இடர்பாடுகளோ அல்லது

2009 பிப்ரவரி 19]

தீவைப்புச் சம்பவங்களோ, எந்த நிகழ்ச்சிகளாக இருந்தாலும் அந்த இடத்திற்கு உடனடியாக சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் போவதற்கான வாய்ப்பு இருக்கும். அந்த முறையைத்தான் காவல் துறை தமிழகத்தில் சிறப்பாகச் செய்துவருகிறது. அதே வாய்ப்பைத் தமிழகத்தின் உயிர் நாடித் துறையாக இருக்கிற நம்முடைய வருவாய்த் துறைக்கும் செய்துதருவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே உள்ளாட்சித் துறையில் B.D.O.-க்கள் வட்டார--வளர்ச்சி அலுவலர்கள், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களுடைய அலுவலகங்களிலும், அவர்களுடைய வாகனங்களிலும் இது பொருத்தப்பட்டு, தற்போது கடலூர் மாவட்டத்தில் முன்மாதிரியாகப் பொருத்தப்பட்டு வெற்றியடைந்துகொண்டு வருகிறது. இதை நம்முடைய கிராம நிருவாக அலுவலர்கள் அளவிலும் கொண்டு செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல செய்தி நிகரிகள் மற்றும் மின்னணு அஞ்சல் இவை எல்லாம் இப்பொழுது நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கின்றன. படிப்படியாக தமிழகம் முழுக்க இருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகங்களிலே செய்தி நிகரிகள்மூலமாக செய்திகள் சேகரிக்கப்பட்டு, அரசுத் தலைமையகத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவர் சொல்லக்கூடிய இந்த வயர்லெஸ் முறைக்கு, இந்தக் கம்பியில்லாத் தந்தி முறைக்கு, இப்போது டவர்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. 13 மாவட்டங்களிலே முதலிலே ஒருவழிப் பாதையாகத்தான் இருந்தது; ஒருவழிச் செய்திகளாகத்தான் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இப்பொது அதை இருவழிச் செய்திகளாக மாற்றுவதற்காகத்தான் கடந்த ஆண்டு கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மத்திய அரசினுடைய அனுமதியோடு டவர் அமைக்கின்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று, முடியும் தருவாயில் இருக்கின்றன. ஏற்கெனவே வருவாய்த் துறையில் ஒவ்வொரு

[2009 பிப்ரவரி 19

மாவட்டத்தினுடைய வட்ட அலுவலகங்களிலே இந்த செய்தி நிகரிகள் முழுமையாக இன்றைக்கு நிறுவப்பட்டிருக்கின்றன. கம்பியில்லாத் தந்தி முறையையும் நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். வருகின்ற காலத்திலே அரசு அதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறைமூலம் கிராம நிருவாக அலுவலர்களுக்காக ஒவ்வொரு கிராமத்திலும் புதிதாக கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், துரதிருஷ்டவசமாக அந்த வருவாய்த் துறை அலுவலகங்களிலே கிராம நிருவாக அதிகாரிகள் காலையிலே இருந்து பணியாற்றுவதில்லை என்பதை அரசு அறியுமா? அப்படிப் பணியாற்றாத அதிகாரிகள்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும். கண்டிப்பாக காலையில் ஒரு நேரம் குறிப்பிட்டு, மாலை வரை அந்த அலுவலகத்திலே இருக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தாலும்கூட, அவர்கள் அதுபோன்று இருப்பதில்லை. ஏழை, எளிய மக்கள் எல்லாம் பல முறை போய் அங்கே பார்த்து, திரும்பித் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து உடனடியாக அத்தகைய அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் கிராம நிருவாக அலுவலர்கள் அலுவலகத்திலே இருப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கிராம நிருவாக அலுவலர் பணி என்பது அலுவலகத்திலே நிரந்தரமாக இருக்கின்ற பணி அல்ல. அவர்கள் வெளியிலேயெல்லாம் போக வேண்டும். Field Inspection இருக்கிறது. சர்வே என்றாலும் போகவேண்டும். சர்வேக்கு பணம் கட்டினால் போகவேண்டும். அதுபோன்ற பல பணிகள் இருக்கின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய பணிகள்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். Mass Contact programme எல்லா இடங்களிலும் மனு வாங்குவது, அரசினுடைய நலத் திட்டங்களை நிறைவேற்றுவது

2009 பிப்ரவரி 19]

ஆகியவற்றை அவர்கள்தான் செய்ய வேண்டும். பெரும்பாலும் காலையிலே கண்டிப்பாக கிராம அலுவலர்கள் அலுவலகத்திலே இருப்பார்கள். ஏதாவது கிராம நிருவாக அலுவலரைக் குறிப்பிட்டு, இவர் அப்படி இருக்கவில்லையென்றும், இவர் அலுவலகத்திற்கே வருவதில்லை என்றும் குறிப்பிட்டுச் சொன்னால், நிச்சயமாக அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

5. தகவல் கோரல்

(அ) இந்திய இறையாண்மைக்கு எதிராக, விடுதலைப் புலிகளை ஆதரிப்போர்மீதும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவோர்மீதும் நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் இந்தியத் திருநாடு ஒரு ஜனநாயக நாடு. இந்த ஜனநாயக நாட்டில் பல கட்சிகள், பல அமைப்புகள் என்று நிறைய இருக்கின்றன. அந்தந்த அமைப்புகளும், அந்தந்தக் கட்சிகளும் ஒரு எல்லைக்குள் இருந்து செயல்பட்டால்தான் அமைதி தவழக்கூடிய ஒரு நாடாக நம்முடைய நாடு இருக்கமுடியும். அவர்கள் ஏதோ தங்களுக்குத்தான் உரிமை இருக்கிறது என்று சொல்லி, மற்ற கட்சிகளுக்கு இருக்கக்கூடிய உரிமைகளை அவர்கள் துச்சமாக மதித்து, பல இடையூறுகள் செய்துவருவது என்பது தினந்தோறும் நடக்கக்கூடிய செயல்பாடுகளாக நம்முடைய தமிழகத்தில் இப்போது முளைத்திருக்கிறது. குறிப்பாக காங்கிரஸ் பேரியக்கத்தை நோக்கி இன்று பலபேர், விடுதலைப் புலிகளுடைய ஆதரவாளர்கள் என்கிற வகையில், இலங்கைத் தமிழர்களுக்கு நாங்கள்தான் பாதுகாப்பு என்கிற போர்வையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.